மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலாவதி மருந்துகளைவிட போலி மருந்துகள்தான் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடியவை என்று நான் சொன்னதை வேண்டுமென்றே திசை திருப்பி, ஏதோ முதலமைச்சர் தவறாக - "காலாவதி மருந்துகளால் யாருக்கும் ஆபத்தில்லை" என்று சொன்னதாக ஒரு அரசியல் விவாதத்தை சில நண்பர்கள் இந்த அவையிலே மாத்திரமல்ல; வெளியிலேயும் தங்களுடைய கட்சிப் பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். நான் சொன்னது, காலாவதி மருந்து என்பது, பிறகு பிரயோசனமே இல்லாமல், எந்தவிதமான சாதகமும் இல்லாமல், எந்தவிதமான நன்மை தீமை இல்லாமல் பயன்படாமல் போய்விடுகிறது. ஒரு நோயாளிக்கு அந்த மருந்தைக் கொடுத்தால், கொடுக்க வேண்டிய உண்மையான மருந்தைக் கொடுக்காமல், கொடுக்கக்கூடாத ஒரு மருந்தைக் கொடுத்ததாக ஆகிவிடும் என்றுதான் இந்த அவையிலே விளக்கம் அளித்திருக்கின்றேன். வேண்டுமானால், நான் அளித்த விளக்கத்தை மீண்டும் படித்துப் பார்த்துக்கொள்ளலாம். நான் எதற்குச் சொல்ல வருகிறேன் என்றால், காலாவதி மருந்துகளைவிட போலி மருந்துகள் ஆபத்தானவை என்பதற்காகத்தான் சொல்ல வந்தேன்.

அதுமாத்திரமல்ல; காலாவதி மருந்துகள் விற்பனையாகின்றன. சில பேர் அதிலே பிழைக்கிறார்கள், ஏமாற்றி வாழ்கிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டவுடன், எல்லா அதிகாரிகளையும், தலைமைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளர், அமைச்சர், இப்படி எல்லோரையும் அழைத்து, உடனடியாக ஓர் ஆலோசனைக் கூட்டம் நடத்தி, இதைப் பற்றி ஆராய்ந்து, அன்றைக்கே நான் இட்ட உத்தரவினால்தான், இன்றைக்குப் பல பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை, (மேசையைத் தட்டும் ஒலி) அவசரப்பட்டு வேண்டுமென்றே என்மீது அபவாதம் கூற வேண்டுமென்று எண்ணுகின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உட்பட அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். வேறு கட்சிக்காரர்கள் என்றால் நான் அதைப் பொருட்படுத்த மாட்டேன். எதையும் துல்லியமாக ஆராய்ந்து, அதைப் பற்றிச் சொல்லக்கூடிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியே இப்படிப்பட்ட ஒரு மகத்தான தவறை, பழியை என்மீது போடுமேயானால், அதற்காக நான் மிக மிக வருந்துகிறேன்.